1968 ஆகஸ்ட் 17]

லும் அனுமதி பெறவேண்டியிருக்கிறது. பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட நிதியாக இருந்தாலும்சரி, மானியமாக இருந்தாலும்சரி, ஊராட்சி மன்றம், ஒன்றியங்கள் இவற்றினுடைய நிதியாக இருந்தாலும்சரி, அரசாங்கத்தினுடைய அனுமதி பெறவேண்டும் என்றிருக்கிறது. கல்வித் துறையினரின் விதிகளுக்கு உட்பட்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

Ariyalur–Pattukottai Railway Line

* 16 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Public Works be pleaesd to state whether the Government have recommended to the Government of India the linking of Ariyalur and Pattukottai by means of railway via Tiruvaiyaru and Thanjavur?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அரசாங்கம் அத்தகைய பரிவுரை எதையும் செய்யவில்லை.

கிருஷ்ணா கோதாவரி நதிகளின் உபரி நீர்

* 17 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலில் வீணாகப் போய்விழும் கோதாவரி, கிருஷ்ணா நதித் தண்ணீரை நமது ராஜ்யத்திற்குக் கொண்டுவரும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) இது குறித்து ஆந்திர மாநிலத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியிருந்தால் அதன் விவரம் மேஜையின் மீது வைக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) அவ்வித உத்தேசம் உள்ளது.

(இ) அதுபற்றி முக்கியமான பேச்சு வார்த்தை எதும் இதுவரை நடைபெறவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இதுபற்றிப் பத்தாண்டுக் காலமாகவே, "பேச்சு வார்த்தை நடைபெறுகிறது, நடைபெற்று வருகிறது" என்றுதான் பதிலளிக்கப்பட்டு வருகிறது. இப்போதுள்ள நிலைமை நம் எல்லோருக்கும் தெரியும். பத்தாயிரக் கணக்கான, இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களில் விவசாயம் அழிந்துவிட்டது. ஆடுமாடு செத்துவிட்டது, மனிதன் இறந்துவிட்டான் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, தண்ணீரை நமக்கென்றே அவர்கள் கொடுக்கமாட்டோம் என்று சொன்னாலும், வீணாகும் தண்ணீரினால் அவர்களுக்குச் சேதம் ஏற்படுகிற நிலையில்.—அப்படி அவர்களுக்கு அவசியமற்றபோது—வீணாகக் கடலில் போய் விழக் கூடிய தண்ணீரை, மிகப் பெரிய கால்வாய் வெட்டி, தமிழகத்திற்குத் திருப்பிவிடக் கூடிய அளவுக்காவது